# வாழ்த்துரை



அன்புக்குரியவர்களே!

இறைவன் சித்தமில்லாமல் ஒரு துரும்பு கூட அசையாது என்பது தான் உண்மை. அப்படி இருக்க ஆணிகள் அவரது உடலை அசைத்தது, அவர் இசைந்ததால் தான். மனுகுல மீட்பிற்காக தன்னையே தாழ்த்தி, சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு தன்னையே பலியாகத் தந்தது, மனுகுலத்தின் மீதுள்ள அன்பின் அதிர்வலைகளால்தான். சிலுவையில் ஆணிகள் இறைவனை வெற்றி கொள்ளவில்லை. மாறாக இறைவன் மனுகுலத்தின் மீது கொண்ட அன்பின் அதிர்வலைகளே சிலுவையை வென்றது.

தவக்காலம் நமது வாழ்க்கையை நாமே பரிசீலிக்கும் காலம். உனக்காக நான் மரித்தேனே! எனக்காக நீ என்ன செய்தாய்? என்ற இறைமகன் இயேசுவின், கேள்விக்கு பதில், நமது சிந்தனை, சொல், செயல், இவைகளில் ஏற்படும் மாற்றமே. அதற்கு இச்சிலுவை பாதை நமது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு விசுவாச முயற்சி. மேலும் இது போன்ற விசுவாசத்தில் உங்களை வளர்த்துக்கொள்ள, கிறிஸ்துவத்தை எளிய முறையில் அறிந்துகொள்ள கிறிஸ்துவ வாழ்வியல் பற்றிய முழுமையான கருத்துக்களை பகிர்ந்து கொள்ள www.Connectingchristiansinfo.com. என்ற இணையதளம் உங்களுக்கு உதவியாய் இருக்குமென்று நம்புகிறேன். இறையாட்சி வளர, இறை உறவில் நிலைக்க இந்த விசுவாச முயற்சிகள் நமக்கு பாலமாய் அமையட்டும்.

இறை ஆசீருடன் எனது வாழ்த்துக்கள்.

அருட்தந்தை. A.**டேவிட் ஆரோக்கியம்**
**இயக்குனர்**
சாந்தோம் கலைத்தொடர்பு நிலையம்.



# 1. இயேசு தீர்ப்பிடப்படுகிறார்

திவ்ய இயேசுவே...

நீங்க தீர்ப்பிடப்படும்போது அங்க பிலாத்து இருந்தாங்க; தலைமை குருக்கள் இருந்தாங்க; பரிசேயர்–சதுசேயர் இருந்தாங்க. பல அதிசயங்களை செஞ்சி நீங்க குணப்படுத்தின பொது மக்கள் கூட அங்க இருந்தாங்க. அங்க இருந்த எல்லோருக்குமே தெரியும், நீங்க நல்லவங்கன்னு! கெட்டவங்களுக்குதான் இதுபோல கொடுமையான தண்டனை கொடுப்பாங்களாம். ஆனா ஏதோ ஒரு சூழ்நிலை வேகத்துலதான். உங்களை இந்த சிலுவையை சுமக்க வைச்சாங்க.

எனக்கு ஒன்னு நினைவுக்கு வருது. எங்க கிளாஸ்ல ஒரு பொண்ணுடைய கம்மல் காணாம போச்சு. எப்பயோ ஒரு தடவை தப்பு செஞ்ச ஒரு பொண்ண சந்தேகப்பட்டு, அவதான் இத செஞ்சிருப்பான்னு முடிவு பண்ணி, அவளை அடிச்சாங்க. அந்த நாள் முழுதும் அவ அழுதுக்கிட்டே இருந்தா. சாயங்காலமா ஸ்கூல் முடிஞ்சி வீட்டுக்குப் போறப்போ வாட்ச் மேன் வேகமா வந்து “இந்த கம்மல் யாருது? இது கிரவுண்ட்ல கீழக்கிடந்தது” என்று சொல்லி கொடுத்துட்டு போனாரு. அப்பதான் தெரிஞ்சது, நாங்க எவ்வளோ பெரிய தப்புபண்ணிட்டோம்னு.

ஜெபம்:
எங்களோட தீர்ப்பால மத்தவங்கள காயப்படுத்தாம பொறுமையா,
நிதானமா, அன்பால அந்த சூழ்நிலையை மாற்ற எங்களுக்கு
வரம் தாங்க இயேசுவே...
எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தால் நித்திய இளைப்பாறுதல் பெறுவார்களாக



# 2. சிலுவையைச் சுமத்துதல்

திவ்ய இயேசுவே...

சிலுவையை தூக்கி உங்க முதுகுல வச்சப்போ, அங்க இருந்தவங்கயெல்லாம் உங்களை கேலி பண்ணாங்களாம்!

நாங்க காலையில எழுந்துருச்சு ஸ்கூல் போறத்துக்கு முன்னாடியே அம்மா வேலைக்கு போயிருவாங்க. அப்பா, நாங்க எழுந்திரிக்கரதுக்கு முன்னாடியே அவரும் வேலைக்கு போயிருவாரு. ஆயாம்மான்னு நாங்க கூப்பிடுற, எங்க வீட்டுல வேலசெய்றவங்க எங்கள வேக வேகமா ஸ்கூலுக்கு கூட்டிட்டு போவாங்க. அந்த ஸ்கூல் பேக்கை தூக்கிட்டு எங்களால நடக்கமுடியாம கஷ்டப்பட்டு தூக்கிகிட்டு போவோம். ஸ்கூல விட்டு வந்த உடனே Music Class-·Drawing Class, Hindi Class இப்படி எங்க எங்கயோ என்ன அனுப்புவாங்க. கேட்டா பக்கத்து வீட்டு மீனா போல நானும் All Rounder-ஆ இருக்கணுமாம் அவங்களுக்கு தெரியாது, இந்த சின்ன வயசுல இது எங்களுக்கு பெரிய சுமைன்னு!

ஜெபம்:
அன்பு இயேசுவே! இந்த உலக புகழ்க்காக, எங்க மேல ஆசை, கனவு இலட்சியம்ன்னு சுமையை சுமத்தாம, உங்களுக்கு உகந்த பிள்ளைகளாக எங்களை வளர்க்க எங்க பெற்றோரை ஆசீர்வதிங்க இயேசுவே... நாங்களும் பெற்றோருக்கு சுமையா மாறிடாம இருக்க வழி நடத்துங்கப்பா!

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தால் நித்திய இளைப்பாறுதல் பெறுவார்களாக



# 3. முதல் முறை தரையில் விழுதுதல்

திவ்ய இயேசுவே...

நான் தவழ்ந்து வேகமா ஒரு சுவரை பிடிச்சு நடக்க ஆசைப்பட்டேன். அப்போ தவறி விழுந்தப்போ, எல்லோரும் சந்தோஷப்பட்டாங்க. ஏன் தெரியுமா? நான் விழுந்ததுக்காக இல்ல; நானே எழுந்து நிற்க முயற்சி செஞ்சதுனால. ஆனா நீங்க தள்ளாடி சிலுவை பாரத்தால் கீழ விழுந்தப்போ உங்கள பார்த்து ஏளனமா சிரிச்சாங்க. அவுங்களுக்குத் தெரியாது; வாழ்க்கைங்கிற பாதையில நாங்க சிறப்பா நடக்கத்தான் நீங்க விழுந்தீங்கன்னு.

ஜெபம்:
எங்களோட சுயநலமான, இன்பமான வாழ்க்கைக்காக மத்தவங்களை விழவைக்காம, மற்றவர்களை எழவைக்க நாங்கள் உதவ, நல்ல மனதை தாங்க இயேசுவே...

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தால் நித்திய இளைப்பாறுதல் பெறுவார்களாக



# 4.அன்னையின் சந்திப்பு

திவ்ய இயேசுவே.

ஸ்கூல் முடிச்சு நான் வந்த உடனே நான் தேடுற மொதோ ஆளு என் அம்மாதான். ஏன்னா அவங்கதான் என்ன அதிக பாசமாவும், அக்கறையோடும் எவ்வளோ வேல இருந்தாலும் என்ன வரவேற்பாங்க. எனக்கு எப்போ என்னோட அம்மாவ பார்த்தாலும் ரொம்பா சந்தோஷமா இருக்கும். ஆனா உங்கள உங்க அம்மா பார்த்தப்போ ஏன் அழுதாங்கன்னு ரொம்ப யோசிச்சேன், அப்பதான் எனக்கு உண்மை புரிஞ்சது; நாங்க நல்லா இருக்கனும், சந்தோஷமா இருக்கனும்னுதானே நீங்க இந்த பழிய ஏத்துக்கிட்டிங்க! ஆனா நாங்க அதை மறந்து பாவத்திலேயே திரும்பத் திரும்ப நடக்கறோம்னு உங்கம்மா மரியாள் அழுதாங்கல்ல.

ஜெபம்:
அன்பு இயேசுவே நீங்க எதுக்காக இந்த பழிய ஏத்துக்கிட்டீங்களோ, அதை உணர்ந்து நாங்கள் வாழ வரம் தாங்க இயேசுவே...

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தால் நித்திய இளைப்பாறுதல் பெறுவார்களாக



# 5. சீமோன் உதவி

திவ்ய இயேசுவே.

நீங்க சிலுவை சுமந்து போனத எல்லோருமே வேடிக்கப்பார்த்தாங்க. சூழ்நிலை காரணமா சீமோன் உதவிக்கு வந்தது உங்களுக்கு ஆறுதலா இருந்துச்சு...

நான் ஒன்பதாவது வகுப்பு படிச்சிட்டு இருக்குறப்ப என்னோட பிரண்டுக்கு Exam-ல பதில் ஏதுவுமே தெரியலன்னு சொன்னா. எனக்கு மனசு கேக்காம அவ பார்த்து எழுத நான் உதவி பண்ணேன். இரண்டு பேரும் பாஸ் பண்ணிட்டோம். ஆனா 10th வகுப்புல அவ பெயில் ஆயிட்டா. அப்பதான் எனக்கு தெரிஞ்சுது, நான் பண்ணது உதவி இல்லன்னு. நான் மட்டும் அன்னைக்கு உதவலன்னா பயத்துலயாவது படிச்சு பாஸ் பண்ணியிருப்பா. நான் பண்ண அந்த தப்பாலதானே அவ இந்த நிலைக்கு வந்தா?அன்புன்ற பேர்ல சில இடங்கள்லே தவறா உதவி செஞ்சியிருக்கேன்னு அப்பதான் புரிஞ்சிக்கிட்டேன்.

ஜெபம்:
அன்பு இயேசுவே நாங்கள் தீமைக்கு உதவாம நன்மைக்கு உதவ வரம் தாங்க இயேசுவே...

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தால் நித்திய இளைப்பாறுதல் பெறுவார்களாக



## 6. வெரோணிக்காவின் சந்திப்பு

திவ்ய இயேசுவே...

அவ்வளவு கூட்டத்துக்கு நடுவுல தன்னோட அன்பை வெளிப்படுத்தனும்னு நெனச்சு உங்க வியர்வையை துடைக்க துணிச்சலோடு ஒடி வந்தாங்க வெரோணிக்கா. அவுங்களோட துணிச்சலுக்கு நீங்க கொடுத்த பரிசுதான் உங்க முகச் சாயல்!

ஒரு உருவத்தின் அச்சுதான் சாயல். உண்மையான உங்க உருவத்தின் குணம்னு பார்த்தா அன்பு, கண்டிப்பு, பணிவு, ஞானத்துடன் கூடிய செயல்பாடு, பெற்றோர்க்கு கீழ்படிதல், பெரியவர்களுக்கும், ஏழைகளுக்கும் உதவுதல் இப்படி சொல்லிட்டே போகலாம். "நீங்கள் என்னுடைய சாயல்னு" நீங்களே சொல்லியிருக்கீங்க. ஆனா நாங்க பொறாமை, அலட்சியம், கீழ்படியாமை, ஞானமற்ற செயல் இப்படி எங்களோட செயல்பாட்டின் முலமா உங்க சாயலுக்கு எதிராகத்தானே வாழ்ந்திட்டு இருக்கோம்.?

ஜெபம்:
உம் சாயலைக் கொண்ட நாங்கள்
உம்மைப் போல் வாழ **வரம் தாங்க இயேசுவே.**

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தால் நித்திய இளைப்பாறுதல் பெறுவார்களாக



# 7.இராண்டாம் முறை விழுதல்

திவ்ய இயேசுவே.

சிலுவை பாரம் தாங்காம நீங்க இரண்டாம்முறை விழுந்திங்கன்னு எங்க பாட்டி சொன்னாங்க!

டேய் “யாருக்கும் தெரியாம நம்ப பிளான் பண்ண மாதிரி உங்க அப்பாவோட பணத்துல இருந்து வேண்டிய பணத்த எடுத்துக்கிட்டு பஸ்டாப்கிட்ட வந்துருடா” என்று அவசரமாய் சொல்லிட்டு கட்டாச்சு போன் கால். இதை செய்யலனா நம்மள அந்த குருப்பிலேயே சேர்த்துக்க மாட்டாங்க. உனக்கு தில்லே இல்லன்னு கிண்டல் பண்ணி எல்லாரும் சிரிப்பாங்க. அந்த நேரத்துல அப்பிடியே பயங்கரமா என்மேலயே எனக்கு கோபம் வரும். அதனால ஒரு முடிவு பண்ணி பணத்தை எடுத்துக்கிட்டு நாங்கப் போட்ட பிளான்படி போனோம். ஆரம்பத்துல சந்தோமா இருந்த நாங்க, ஒரு பெரிய பிரச்சனைல மாட்டிக்கிட்டோம் அப்பதான்புரிஞ்சுது; நான் சரியான பாதையில, சரியான நண்பர்கள் கூட இல்லன்னு பொய் சொல்லும்போது, திருடும்போது எங்க அறியாமைனால ஒரு வேகத்துல அடிக்கடி எங்க வாழ்க்கைல விழுறோம்.

ஜெபம்:

சிறிய வயசுல ஆர்வத்தால நாங்க சரிக்கி விழந்துடாம நிதானமா செயல்பட **எங்களுக்கு ஞானம் தாங்க இயேசுவே...**

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்

மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தால் நித்திய இளைப்பாறுதல் பெறுவார்களாக



# 8.எருசலேம் பெண்கள் சந்திப்பு

திவ்ய இயேசுவே...

பொதுவா எங்களோட சந்திப்பெல்லாம் ரொம்ப வித்தியாசமானது.
Friends Birthday Party,Childrens Day, Outing ன்னு ரொம்ப பிரம்மாண்டமா, ஆடம்பரமா வேனும் வேணான்னு சொல்லக்கூடிய அளவிற்கு கொண்டாடுவோம். எங்க ஸ்கூல்ல ஒரு நாள் ஒரு அனாதை இல்லத்திற்கு கூட்டிட்டு போனாங்க. அங்க என்னோட வயசுல நிறைய பிள்ளைங்க இருந்தாங்க. அவங்க எங்ககிட்ட ஆசையா ஒடிவந்து எங்களை பிடிச்சிக்கிட்டாங்க. அன்னைக்கு எங்க வீட்டுல எல்லாரும் ஒரு முடிவெடுத்தோம்; எங்க குடும்பத்துல எந்த நிகழ்ச்சியா இருந்தாலும் எப்பிடியாவது அந்த Home-க்கு போய் அவங்களையும் எங்க சந்தோத்துல பங்கு எடுக்க வைக்கனும்னு முடிவெடுத்தோம்.

ஜெபம்:
அன்பான இயேசுவே எங்கள் சந்திப்பு பிறருக்கு ஆறுதலை தர வேண்டிய வரம் தாங்க இயேசுவே ...

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தால் நித்திய இளைப்பாறுதல் பெறுவார்களாக



# 9. முன்றாம் முறை தரையில் இயேசு விழுகிறார்


திவ்ய இயேசுவே ...

படை வீரர்கள் கையே வலிக்கும் அளவிற்கு தாங்க முடியா கசையடி; தலையில் இரத்ததை ஏற்படுத்தும் முள்முடி; வறண்ட பாலைவனத்தில் நிழல் தேடி தாகத்தோடு அலையும் மனிதனைப்போல், தீர்க்க முடியாத தாகம் ஒருபுறம். சில வேளைகளில் நமது மூளைக்கும் உடலுக்குமான உறவில் துண்டிப்பு ஏற்படுவது போல, அவரது கால் கூட கட்டளையை ஏற்க மறுத்தது; முன்றாம் முறை விழுந்தார் இயேசு.

யாராவது அட்வைஸ் பண்ணா எனக்கு அப்படி ஒரு கோபம் வரும். அப்படியே ஓங்கி அடிக்கனும்னு போல இருக்கும். எப்பப்பார்த்தாலும் படி, டியூசன் போ, ஊர்சுத்தாத, பிரண்டு வீட்டுக்கு போகாதன்னு அப்பா, அம்மா டார்ச்சர் ஒருபக்கம். ஸ்கூலுக்கு போனா Exam, ரிவின், பிராஜெக்ட், பிராக்டிகல்னு டீச்சரோட அட்வைஸ் ஒரு பக்கம் இதுல இருந்து எஸ்கேப் ஆக கொஞ்சம் பொய் சொல்ல ஆரம்பிச்சேன், ஸ்கூலுக்கு போறேன்னு சொல்லிட்டு நானும் என்னோட பிரண்ட்சும் வெளியே கிளம்பிடுவோம். இப்படியே ஆரம்பிச்சு பீச் தியேட்டர்னு இப்படி எங்க மனம்போன போக்குல போயி பிரண்ட்ஸ் வலுகட்டாயத்தால சில பழக்கத்துக்கு அடிமையா ஆனேன். அதை விட முடியாம பெரிய தவறு செய்ய ஆரம்பிச்சிட்டேன். யாரை பார்த்தாலும் கோபம், எரிச்சல், ஒரு விரக்தி இப்படியே போச்சு என் வாழ்க்கை. என் கூட படிச்ச மத்த பசங்கயெல்லாம் அடுத்த லெவலுக்கு போயிட்டாங்க. இப்படி இருந்த என்னையும் மாத்தியது ஒரு பையன் தான். உடல் உறுப்புகள் குறைபாடு உள்ள ஆனா தன்னம்பிக்கை என்கின்ற அந்த ஒரு அங்கத்தை வச்சு அவன் வாழ்க்கைல முன்னேறதை பார்த்தேன். அன்னைக்கு முடிவு பண்ணேன்; என்னைய போல உள்ள மத்த பசங்களுக்கு முன்னாடி நானே ஒரு முன் உதாரணமா இருக்கனும்னு நினைச்சேன்.

ஜெபம்:
எங்கள் சோதனை வேளையில் நாங்கள் வீழ்ந்து விடாமல் உம் துணையோடு சோதனையை வெல்ல **வரம் தாங்க இயேசுவே...**

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தால் நித்திய இளைப்பாறுதல் பெறுவார்களாக



# 10. ஆடைகளைக்களைதல்

திவ்ய இயேசுவே

அந்த பணக்கார பங்களா வீட்டு பாப்பா போல நானும் வித விதமான டிரஸ் போட முடியுமா? எத்தனை கலர் கலரா டிரஸ்ன்னு எண்ணியது ஒரு சாலையோர குழந்தை சில கொடூரமான அரக்கனுங்க எங்களை போல சின்ன பிள்ளைகளை கடத்திட்டு போயி ஆளு தெரியாத ஊர்ல மொத்தமா வித்துட்டு போயிட்டாங்க. அங்க நாங்க சாப்பிட்டு உயிரோட இருக்கனும்னா சில ரூல்ஸ் இருக்குதாம்.
தல சீவக்கூடாது, குளிக்க கூடாது, யாருகிட்டயும் நான் யாருன்னு கூட சொல்லக்கூடாது, குறிப்பா நல்ல டிரஸ் இருந்தும் கிழிஞ்ச டிரஸ் தான் போடனும்.
நான் பரவாயில்ல; சின்ன குழந்தைங்க அந்த டிரஸ் கூட இல்லாம இருக்கனும்
இதுலயும் ஒரே ஒரு நல்ல காரியம்; மற்ற ஜீவராசிகளை விட நாங்க தான் நன்றியுள்ளவங்க. ஏன்னா அம்மா தாயே என்ற சொல்லுக்கு அடையாளமே நாங்க தான்! இதல்லாம் ஒரு பக்கம் இருக்க, சின்ன குழந்தைகள் என்று கூட பார்க்காம சில கொடுரமானவங்க எங்களுக்கு பாலியல் தொல்லை செய்ராங்க.

ஜெபம்:
அன்பு இயேசுவே இனி எங்களைபோல மற்ற குழந்தைகளும் உருவாகம இருக்க, இந்த சமூகம் மாற வரம் தாங்க இயேசுவே...

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தால் நித்திய இளைப்பாறுதல் பெறுவார்களாக



# 11. சிலுவையில் அறைதல்

திவ்ய இயேசுவே...

நாங்கெல்லாம் ரெடியா இருந்தோம்; பெல் அடிச்சதும் ஒரே ஓட்டமா கிளாசை விட்டு வெளிய கத்திக்கிட்டே ஓடி வந்தோம்; எல்லோரும் வீட்டுக்கு போக நேரம் வந்துச்சு. நானும் என்னோட சில பிரண்ட்சும் ஆட்டோக்காக வெயிட் பண்ணிக்கிட்டிருந்தோம். அப்போ ஒரு பையன் கட்டிட வேலைக்கு கல்தூக்கிட்டு போறதை பார்த்தேன். என்னோட ஆரவாரம் கொஞ்சம் கொஞ்சமா குறைஞ்சு அவனோட செயல்ல என் கவனம் திரும்பிச்சு, தொடர்ந்து அவனையே பார்த்துக்கிட்டிருந்தேன். வெளுத்துபோன முகம்; தலையெல்லாம் ஒரே தூசு; வியர்வைல நனைஞ்ச சட்டை, செருப்புக் கூட இல்லாத காலு, சாப்பிடாம ஒடுங்கிய உடம்பு.

"ஏம்ப்பா உனக்கு பிடிச்ச டிபன் பன்னியிருக்கேன் நல்லா சாப்பிடு, மறந்துடாம அந்த ஹோம் வொர்க் பண்ண நோட்டை எடுத்து பேக்குல வச்சுக்கோ, இதுல பிரேக்ல சாப்பிட ஸ்னாக்ஸ்சும் வச்சிருக்கேன்"னு எனக்கு எங்க அம்மா சொல்லி வழி அனுப்பும்போது நான் நெனைப்பேன். "இவ்வளோ: பெரிய சுமை எனக்கு தேவையா? நான் கட்டாயமா படிக்கனுமா"ம்னு என் படிப்பயே பெரிய ஆணியா நெனைச்சேன். ஆனா இந்த காட்சி பார்த்ததுக்கு அப்புறமா தெரிஞ்சுது எது உண்மையான ஆணின்னு.

ஜெபம்:
அன்பு இயேசுவே இந்த சிறிய வயதில் எங்கள் கடமைகளை ஆணியாக கருதாமல் பொறுப்போடு வாழ வரம் தாங்க இயேசுவே...

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தால் நித்திய இளைப்பாறுதல் பெறுவார்களாக



# 12 இயேசு உயிர் விடுகிறார்

திவ்யஇயேசுவே...
உடலுக்கும் உயிருக்குமான புரிதல், நமக்கு மிக நெருக்கமானவர்கள் இறக்கும் போதுதான் புரியும். "இந்த உயிர் உடலில் எங்கு உள்ளது? என்ற கேள்வி அனைவருக்கும் எழும். "உமது சித்தத்திற்காகவே பிறந்தேன், வாழ்ந்தேன், இறப்பும் உம் சித்தமாய் இருக்கட்டும்" என்று தனது உயிரை தந்தையிடம் ஒப்படைகிறார் இயேசு.
கருக்கலைப்பில் இறந்த ஒரு குழந்தையின் குரல் இவ்வாறு;
"நானே உன்னை பெயர் சொல்லி அழைத்தேன். நீ உருவாகும் முன்னே கருவிலே உன்னை தெரிந்து கொண்டேன்" என்று நான் இந்த உலகத்துக்கு வரனும்னு இயேசுவே நீங்க விரும்பினிங்க. நீங்க படைத்த இந்த மனிதர்கள் அவர்கள் பண்ற தப்பால, அவங்களை காப்பாத்திக்க என்ன வேணாம்னு முடிவு பண்ணிட்டாங்க. எனக்கு மருந்து செலுத்தியபோது துடிக்க துடிக்க கதறி கதறி வேதனைப்பட்டு என்னோட வேதனைய வெளியே சொல்ல முடியாம கொஞ்சம் கொஞ்சமா நான் இறந்தேன்.
நீங்க உயிர் விட்டது இந்த மனித குலத்தை பாவத்திலிருந்து மீட்க;
நான் உயிர் விட்டது இவங்க பாவம் போக்க! மனிதர்கள் இனியாவது தெரிஞ்சிக்கட்டும் உங்கள் இறப்பின் இரகசியத்தை.

ஜெபம்:
உங்களின் பாடுகளின் இரகசியத்தை இவர்கள் உணர்ந்து வாழ **வரம் தாங்க இயேசுவே...**

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தால் நித்திய இளைப்பாறுதல் பெறுவார்களாக



# 13 அன்னையின் மரியின் மடியில் இயேசு

திவ்ய இயேசுவே...
கருவில் இருக்கும்போது இந்த உலகத்தின் மீட்பரை அரவணைத்தாய். வளரும்போது திருக்குடும்பம் என்று சொல்லும் அளவுக்கு இறைபக்தியில் உமது மகனை வளர்க்க உமது அரவணைப்பு,
இயேசுவை காணவில்லை என்றவுடனே ஒரு மகனை கண்ணும் கருத்துமாய் வளர்த்த தாயிடம் உள்ள பதட்டம், இன்னும் உமது அரவணைப்பையும் ஆதரவையும் எடுத்து சொல்லும். இறுதியில்,
இவையெல்லாம் நடக்கும் ஒரு நாள் , என் மகன் என்னை விட்டு பிரிவான் என்ற செய்தி முன்னதாகவே ஒரு தாய்க்கு தெரிந்தால், எப்படி ஒரு தாய் தனது உணர்வை வெளிப்படுத்துவாளோ அவ்வாறில்லாமல் அனைவருக்காகவும் என் மகனை கடவுளுக்காக கையளிப்பேன் என்ற உறுதிப்பாட்டுடன் தாரைவார்த்து தரும் காட்சி தான் அன்னை மரியின் மடியில் இயேசுவின் உடல்.

இதே போலதான்; எங்க அம்மாவும் "பார்த்து போப்பா ,நல்ல பழக்கத்தை மட்டும் வளர்த்துக்கோப்பா, அதிக நேரம் போன் போசாத; படிப்புல கவனம் செலுத்தனும்; வண்டியில போகும் போது அதிக சேட்டை செய்யாம நல்ல பிள்ளையா போய்ட்டு நல்ல பிள்ளையா வரனும்"னு எப்ப பார்த்தாலும் சொல்லிகிட்டே இருப்பாக.
இவங்களுக்கு எங்க தெரியுது இந்த கால டிரண்ட்? எங்களுக்கு தெரியாதா? Internet-ல இருந்து Whatsapp வரைக்கும், நாங்கயெல்லாம் Update-ன்னு மனசுல நினைச்சுக்கிட்டு, எனக்கு பிடிச்சமாதிரியே இருந்தேன்.
ஆனா நான் இப்ப என்னதான் கத்தினாலும் அவங்களுக்கு கேக்காது. ஏன்னா, நான் இப்போ இருக்கிறது மருத்துவ மனைல; அவசர சிகிச்சை பிரிவில!

ஜெபம்:
பெற்றோரின் அரவணைப்பை விட்டு ஒருபோதும் பிரியாமல், உன் பிள்ளையாய் வளர **வரம் தாங்க இயேசுவே ...**

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தால் நித்திய இளைப்பாறுதல் பெறுவார்களாக



# 14. இயேசு அடக்கம் செய்யப்படுதல்

திவ்ய இயேசுவே

1. மத்தவங்கள தீர்ப்பிடும் குணத்தை அடக்கம் செய்து, அன்பை விதைக்கும் வரம் தாங்க...
2. உலக ஆசையை அடக்கம் செய்து, உங்க பிள்ளையாய் இருக்க வரம் தாங்க...
3. என்னுடைய சுயநலத்தை அடக்கம் செய்து, மத்தவங்கள உயர்த்த வரம் தாங்க...
4. பாவத்தில் நான் விழக்கூடிய சூழ்நிலையை அடக்கம் செய்து அன்னை மரியின் பிள்ளையாய் வளர வரம் தாங்க...
5. தீமைக்கு உதவுதலை அடக்கம் செய்து, நன்மைக்கு உதவ வரம் தாங்க...
6. எங்க பொய்யான முகத்தை அடக்கம் செய்து, உங்க சாயலா வாழ வரம் தாங்க...
7. எங்க அறியாமையை அடக்கம் செய்து, நாங்க நல்ல பாதையை தேர்ந்தெடுக்க ஞானத்தை தாங்க...
8. எதையாவது எதிர்ப்பாக்கும் சந்திப்பை அடக்கம் செய்து, எங்க சந்திப்பு எல்லோருக்கும் ஆறுதல் தருகின்ற சந்திப்பாய் அமைய வரம்தாங்க...
9. தீமைக்கான சாந்தோத்தை அடக்கம் செய்து, சோதனையை வெல்ல வரம் தாங்க...
10. எனது ஆடம்பரத்தை அடக்கம் செய்து, என்னுடையதை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்க வரம் தாங்க...
11. குழந்தை தொழிலாளர்கள் என்ற அவல நிலையை அடக்கம் செய்து, மற்றவர்களுக்கு கல்வி கிடைக்க என்னால் முடிந்த உதவி செய்ய வரம் தாங்க...
12. சிசுக்கொலை என்ற தவறான காரியத்தை அடக்கம் செய்து, நீங்க தேர்ந்தெடுத்த உயிர் இந்த உலகில் பிறக்க வரம் தாங்க...
13. எனக்கு எல்லாம்தெரியும் என்ற எண்ணத்தை அடக்கம் செய்து, எங்கள் பெற்றோரின் பெரியோரின் அறிவுரைகளைக் கேட்டு நடக்க வரம் தாங்க...
14. இவை அனைத்தையும் அடக்கம் செய்து புதிய படைப்பாய் நாங்கள் உம்மில் உயிர்தெழ வரம் தாங்க இயேசுவே...